**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -3, கடலூர்**

**முன்னிலை: திரு. ஜி. இரகோத்தமன். எம்.ஏ., எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர் எண்.3, கடலூர்**

**சி.எம்.பி.எண்.2717 / 2024**

**2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ம் நாள் வியாழக்கிழமை**

ஆனந்தன்,
த/பெ.பழனி,
பழைய மின்வாரியத் தெரு,
தூக்கணாம்பாக்கம் அஞ்சல்,
கடலூர் மாவட்டம். … மனுதாரர்

-எதிர்-

காவல் ஆய்வாளர்,
திருப்பாப்புலியூர் காவல் நிலையம். … எதிர்மனுதாரர்

-எதிர்-

தட்சிணாமூர்த்தி,
த/பெ.மாணிக்கம் … எதிரி

இம்மனுவானது கடந்த 07.02.2024-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு சி.எம்.பி.எண்.2717 / 2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு இன்று 28.03.2024 இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.B.விஷ்ணுதாசன், பி.ஏ., பி.ல்., அவர்கள் ஆஜராகியும் மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கும்

## உத்தரவு

01. மனுதாரர் கு.வி.மு.ச பிரிவு 156(3)-ன்கீழ் எதிரிமீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடுமாறு இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

## 2. மனுவின் சுருக்கம்:-

மனுதாரருக்கு சொந்தமான நிலம், கடலூர் வட்டம், மலைய பெருமாளகரம் கிராமம், சர்வே எண்.240/3-ல் உள்ளது என்றும், மேற்படி சொத்து மனுதாரருக்கு பூர்வீக பாத்திய சொத்து என்றும், மேற்படி சொத்தை மனுதாரரின் தந்தை பழனி கவுண்டர் என்பவர் அவருடைய சகோதரர்களிடம் பாக விடுதலை மூலம் பெற்று நெல்லிக்குப்பம் சார்பதிவகத்தில் ஆவண எண்.1863 / 2004 ஆக பதிவு செய்து ஆண்டு அனுபவித்து வந்த பழனி கவுண்டர் காலமான பிறகு வாரிசு அடிப்படையில் தற்சமயம் மேற்படி சொத்தை மனுதாரர் அனுபவித்து வருவதாகவும், இந்நிலையில் எதிரி தட்சிணாமூர்த்தி, த/பெ.மாணிக்கம் என்பவர் மனுதாரருக்கு எதிராக கடலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய புகார் மனு அளித்ததாகவும், அவ்வாறு அளித்த மனுவில் எதிரி நீதிமன்ற ஆவணங்களை போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு உரிய எழுத்து மூல வாதுரையை மனுதாரர்

மவாட்ட பதிவாளர் முன்னிலையில் தாக்கல் செய்ததாகவும், அதன்பிறகு மாவட்ட பதிவாளர் அவர்களிடமிருந்து கடந்த 22.08.2022-ம் தேதி தபால் வந்ததாகவும், அந்த கடிதத்தில் எதிரி தட்சிணாமூர்த்தி கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் ந.க.எண்.2435 / ஆ 4 / 2022 மூலமாக எதிரி கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரது பாக விடுதலை பத்திரம் ரத்து செய்யப்பட்டதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், பிறகு மனுதாரர் கடலூர் துணை பதிவு துறை தலைவர் அவர்களிடம் மேல்முறையீட்டு செய்ததாகவும், மேல்முறையீட்டில் எதிரி தட்சிணாமூர்த்தி சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்பு அனைத்தும் போலி என்றும், மேலும் மனுதாரரின் பாக விடுதலை ஆவணம் உண்மையானது என்றும், கண்டறிந்து விரிவான இறுதி உத்தரவு ந.க.எண்.4288 / ஊ / 2022, நாள்; 13.02.2022-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும்,

03. எதிரி நீதிமன்ற உத்தரவை போலியாக தயார் செய்து அதனை மாவட்ட பதிவாளர் முன்பாக தாக்கல் செய்து தவறான முறையில் உத்தரவு பெற்ற எதிரி தட்சிணாமூர்த்தி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

04. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. எதிரி தஷ்ணாமூர்த்தி மாவட்ட பதிவாளரிடமிருந்து தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் போலியானது என்று காவல் துணை பதிவு துறை அலுவலர் தனது விரிவான இறுதி உத்தரவை ந.க.எண்.4288 / ஊ / 2022, நாள்: 13.02.2023-ல் குறிப்பிட்டுள்ளார். எதிரி போலியான ஆவணங்களை மாவட்ட பதிவாளர் முன்பாக தாக்கல் செய்துள்ளார் என்று மனுதாரர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கடந்த 06.06.2023-ம் தேதி திருப்பாப்புலியூர் காவல் ஆய்வாளர் அவர்களிடம் புகார் தாக்கல் செய்துள்ளார். மேற்படி புகார் மனுவானது ஆவண எண்.3 ஆக இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருப்பாப்புலியூர் காவல் ஆய்வாளர் மேற்படி புகாரினை பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை ஆவண எண்.4 ஆக இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் காவல் ஆய்வாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மனுதாரர் கடந்த 05.07.2023-ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு ஆவண எண்.5 ஆக இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஒப்புதல் அட்டை ஆவண எண்.6 ஆக இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

05. மனுதாரர் எதிரி நிகழ்த்திய குற்றச்செயலுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி திருப்பாப்புலியூர் காவல் ஆய்வாளர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கடலூர் ஆகியோர்களுக்கு குற்றவியல் நடைமுறை சட்டப்படி புகார் மனு அனுப்பியுள்ளார். மேற்படி மனுதாரரின் புகாரின் மீது காவல் ஆய்வாளர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்களை கவனமாக பரிசீலித்த வகையில் எதிரி தஷ்ணாமூர்த்தி, த/பெ.மாணிக்கம் என்பவர் மேற்படி தேதியில் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு தனக்கு சாதகமாக இல்லை என்று தெரிந்தே இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத கடலூர் சார்பு நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு வழக்கு எண்.65/87 (திண்டிவனம் சார்பு நீதிமன்றம் உ.மே.வ எண்.72 / 1985) (திண்டிவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மு.வ.எண்.1325 / 1979 தீர்ப்பு நாள்: 09.01.1984 மீதானது)-ஐ தவறான தீர்ப்பின் நகலை மாவட்ட பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பித்து ஒரு தவறான ஆணையை தனக்கு சாதகமாக வழங்கிட காரணமாக இருந்துள்ளதாக முதல் நிலை வழக்கு அமைந்துள்ள காரணத்தினால் இந்த மனுவானது திருப்பாப்புலியூர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இந்த மனு தொடர்பாக சம்மந்தப்பட்ட எதிரிமீது இ.த.ச பிரிவுகள் 420, 465, 468, 471-ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடப்படுகிறது. முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்த பின்னர் இந்த வழக்கினை திருப்பாப்புலியூர் காவல் ஆய்வாளர் அவர்கள் உரிய புலன் விசாரணை செய்ய உத்தரவிட்டும், மேற்படி புலன்விசாரணையின்போது மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான "லலிதா குமாரி வழக்ககில்" கூறப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்ற உத்தரவிட்டும் இந்த வழக்கு சம்மந்தமான புலன் விசாரணை முடித்து ஒரு மாத காலத்திற்குள் இறுதியறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024-ம் மார்ச் திங்கள் 28-ம் நாள் வியாழக்கிழமை இந்த உத்தரவு என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G RAGOTHAMAN

Digitally signed by G RAGOTHAMAN
Date: 2024.03.28 17:35:22 -0200

**நீதித்துறை நடுவர் எண்.3**

**கடலூர்**